[1970 செப்டம்பர் 1

விளையாட்டு அரங்குகள்.

* 163 வினா—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1970–71-ல் எந்தெந்த இடங்களில் புதிதாக விளையாட்டு அரங்குகள் கட்ட தமிழக அரசு உத்தேசித்துள்ளது?

(இ) இதற்காக தமிழக அரசு ஒதுக்கியுள்ள தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடமிருந்து பரிவுரைகள் பெற்ற பின்னர் விளையாட்டு அரங்குகள் கட்டப்படவிருக்கின்ற இடங்கள் முடிவு செய்யப்படுகின்றன.

(இ) ரூ. 2 இலட்சம்.

திரு. ப. மகாதேவன் : தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் நாகர்கோயில் மாவட்ட நலக் குழுவினரால் அண்ணா பெயரில் ஒரு விளையாட்டு அரங்கமும், முதல்வர் கலைஞர் பெயரில் ஒரு ஆடிடோரியமும் கட்டுவதற்கு அந்த மாவட்ட மக்களிடமே பணம் வசூல் செய்து எட்டு லட்ச ரூபாய் இருந்தாலும் அது போதாமலிருப்பதால் அங்கு விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கு இந்த மானியத்திலிருந்து ஏதாவது கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, விளையாட்டு அரங்கு கட்டுவதற்கு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் செலவில் ஐம்பது சத வீதம் அல்லது அதிக பட்சம் ஒரு லட்ச ரூபாய் என்ற அளவு மானியம் வழங்க அரசு ஆயத்தமாக இருக்கிறது. ஆகவே, அதற்கான நிலங்கள் ஆர்ஜிதம் செய்து, மற்றவற்றிற்கும் ஏற்பாடு செய்வார்களானால், அதிகபட்சமாக ஒரு லட்ச ரூபாய் அரசாங்கம் நன்கொடையாக வழங்கும். அந்த வகையில் தான் பிற இடங்களுக்கு நன்கொடை வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, நாகர்கோயிலில் துவங்கப்படுகிற விளையாட்டு அரங்கம் புறம்போக்கு நிலத்தில் இருக்கின்றது. அதற்கு உதவி வேண்டும் என்று மாவட்டக் கலெக்டர் அவர்கள் ஏதாவது உதவிக்குப் பரிந்துரை அனுப்பியிருக்கின்றாரா? அதன்மீது என்ன நடவடிக்கை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கன்யாகுமரி மாவட்டத்தில் விளையாட்டு அரங்கு அமைப்பதற்கான கோரிக்கை எதுவும் அரசுக்கு இதுவரை வரவில்லை. அப்படி வருமேயானால், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது போன்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்குமானால், அதற்கு உதவி செய்வதற்கு அரசு ஆயத்தமாக இருக்கும். இந்த ஆண்டு இந்த வகையில் இரண்டு இடங்களுக்குக் கொடுக்க இரண்டு லட்ச ரூபாய் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. கோவை, தென்னாற்காடு, வடார்க்காடு

1970 செப்டம்பர் 1]

மாவட்டத்திற்குக் கேட்டிருக்கிறார்கள். அங்கேயும் நிலம் பெறுவதிலும் வரைபடம், மதிப்பீடு ஆகியவை அனுப்பிவைப்பதிலும் தாமதம் இருக்கிறது. கன்யாகுமரி மாவட்டத்தில் வரை படம் அமைத்து, மதிப்பீடு ஆகியவை அனுப்பி வைத்தால் நிதி வழங்குவதில் அதிகக் கடினம் இருக்காது.

திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, கோவையில் கட்டவிருக்கும் விளையாட்டு அரங்கத்திற்குப் பல லட்சக் கணக்கான ரூபாய் செலவழிக்க இருக்கிறார்கள். ஆகவே, கோவை அரங்கத்திற்கு அரசாங்கத்தின் உதவித் தொகை இந்த ஆண்டில் கொடுப்பார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கோவையைப் பொறுத்தவரையிலும் நிலம் பெறுவதில் தகராறு இருக்கிறதென்பதால், அது முடிவு பெற்றதற்குப் பிறகு, அங்கிருந்து கோரிக்கை வந்த பிறகு, அதுபற்றி அரசு ஆலோசிக்கும். அது முடிவு பெறுமானால் அரசாங்கம் அதற்கு மானியம் தருவதில் ஆட்சேபணை இருக்காது.

திரு. கே. பி. எஸ். மணி: தலைவர் அவர்களே, தஞ்சை அரண்மனையில் இருக்கும் விளையாட்டு அரங்கை நல்ல முறையில் சீர்படுத்துவதற்கு ஏதேனும் உத்தேசம் இருக்கிறதா? அத்தகைய விண்ணப்பம் ஏதாவது வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதுபற்றி, துவக்கப்படும் வகையில் விண்ணப்பம் வந்தால், ஆராய்ந்து தக்க முடிவு எடுக்கப்படலாம்.

திரு. என். வரதராஜன். தலைவர் அவர்களே, 1969-ம் ஆண்டில் மதுரை மாவட்டக் கலெக்டர் அவர்கள் க்ஷேமநல நிதியிலிருந்து விளையாட்டு அரங்கம் கட்ட பல லட்ச ரூபாய் வசூல் செய்தார்கள். அந்த விளையாட்டு அரங்கம் கட்டுவது எந்த நிலையில் இருக்கிறது? எப்பொழுது வேலை ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மதுரையில் விளையாட்டு அரங்கம் கட்டுவதற்கு ஏற்பாடு நடைபெற்றுக்கொண்டு வருகிறது. ஆனால், அதற்குரிய வரைபடம், மதிப்பீடு இன்னும் தயாரிக்கப்பட்டு அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கப்படவில்லை. விரைவில் வரும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. அவை வந்த பிறகு தக்க நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

மதுரை மருத்துவக் கல்லூரி
பி. பார்மசி மாணவர்கள் உண்ணாவிரதம்

* 164 வினா—திருமதி. கே. பி. ஜானகியம்மாள்: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர், தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மருத்துவக் கல்லூரியில் பி. பார்மசி மாணவர்கள் 13—10—1969 முதல் உண்ணாவிரதமிருக்கும் சமயம் அரசு தலையீட்டால் தீர்த்து வைக்கக்கோரி மதுரை கிழக்குத் தொகுதி சட்டப்